[1980 பிப்ரவரி 13

(ஒ) மதுரை மாவட்ட, ஆலய மகா சிவராத்திரி விழா குறித்து.

திரு. கே. கந்தசாமி—பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா கருமாத்தூரிலுள்ள கள்ளர் நாட்டின் மிகப் பழமையும் புராதனமும் வாய்ந்த முனுசாமி கோயில் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் வகையறாக் கோயில் வருடாந்திர மகா சிவராத்திரி விழா வருகிற 14, 15, 16 பிப்ரவரி 1980-ல் நடக்க இருப்பதால் அருகிலுள்ள அருளாநந்தர் கல்லூரியைச் சார்ந்தவர்கள் திட்டமிட்டு அதைத் தடுக்க முயற்சிக்கின்ற காரணத்தினால் அப் பகுதியிலுள்ள லட்சக் கணக்கான மக்கள் மத்தியில் பீதியும் அமைதியின்மையும் ஏற்பட்டிருக்கின்ற நிலைமை குறித்து அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த செய்தி சம்பந்தமாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் மதுரை மாவட்ட தெற்கு காவல்துறை கண்காணிப்பாளரிடமும் தொடர்பு கொண்டு செய்திகள் கேட்கப்பட்டிருக்கின்றன. இதுவரை அரசுக்கு கிடைத்திருக்கின்ற தகவல் அப்பேர்ப்பட்ட குழப்பத்தை உருவாக்குகின்ற சூழ்நிலை ஒன்றுமில்லை என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவலை வைத்துக் கொண்டு நாளை முதல் நடைபெற இருக்கின்ற இந்த விழா எந்தவிதமான குந்தகமும் அசம்பாவிதமும் இல்லாமல் நடைபெறுவதற்கு தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. மு. வாசன்:— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன் சத்திரம் பஸ் நிலையத்திற்கு அருகில் போக்குவரத்தைச் சேர்ந்த நெடுஞ்சாலையில் விவசாயச் சங்கம் என்ற பெயரால் தனியார் பெரியதாகக் கட்டிடம் கட்டுவது அரசுக்குத் தெரியுமா? அதை அகற்ற அரசு என்ன முயற்சியை மேற்கொண்டுள்ளது.

திரு. வ. துலுக்காணம்:— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

''விருத்தாசலம் வட்டம் மே மாத்தூர் கிராமம் ஐவதகுடி கிராமம் ஆகிய இரண்டும் சோமுகி நதியின் வெள்ளத்தில் வருடா வருடம் மூழ்குவதாலும் அதனால் பல ஆயிரம் மதிப்புள்ள வீடுகள் இடிந்து நாசமாவதாலும்

1980 பிப்ரவரி 13]

வீடுகள் இடியும் போது ஏற்படும் மக்கள் உயிர்சேதமும் பொருட்சேதமும் அந்த கிராம மக்கள் இடையே பீதியை ஏற்படுத்துவது குறித்து''

அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

7. அரசினர் தீர்மானம்

பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பெறுவது குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்:—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பேரவையின் 25(1) விதியின்படி பேரவையை இன்றிலிருந்து (13—2—1980) மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கலாம்.''

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பெறுகிறது.

—

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 1-38 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

66. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 6—7—1979-ஆம் தேதியிடப்பெற்ற 1701-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3)-ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].